**வீரகெட்டிய பிரதேச சபை - 2023**
**-----------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீரகெட்டிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக அமைந்துள்ள 1.6 ஆம் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீரகெட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் பாதகமான அபிப்பிராயமென்றை வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக பட்டியல் இடப்பட வேண்டிய முத்திரை கட்டண வருமானம் மற்றும் நீதிமன்ற தண்டப் பண வருமானம் முறையே ரூபா 33,162,825 மற்றும் ரூபா 1,434,657 தொகையும் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப் பண வருமானம் ரூபா 1,138,588 தொகையும் குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | வருமானம் எதிர் காலத்தில் சரியாக கணக்கு வைக்கப்படும் என்பது. | வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடத்தில் கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது அறவிடப்பட்ட சேகரிப்பு பணம் ரூபா 7,601,683 திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது வாடகை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | வருமாணம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் நடைமுறை அல்லாத சொத்துக்களை கிரயத்தில் கணக்கு வைக்கும் கொள்கைக்கு முரணாக கொள்வனவு கிரயத்தை விஞ்சி கப் வண்டி ஒன்று மீளாய்வாண்டில் | பேரேட்டுப பதிவின் மூலம் திருத்தப்பட்டுள்ளமை. | சொத்தக்கள் கிரயத்திற்கு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கின் ஆண்டின் இறுதி மீதி ரூபா 2,500,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 231,747 தொகைக்காக கடன் கொடுத்தோர் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகள் சரியாக இணங் காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | கடந்த வருடத்திற்கு பெற வேண்டிய ரூபா 200,000 சேகரிப்பு பணம் கணக்கு வைக்கும் போது பெற வேண்டிய சேகரிப்பு பண கணக்கிற்கு வரவு வைக்கப்படாது வாடகை வருமான கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நிலையான வைப்பு கணக்கிற்கு கடந்த வருடத்திற்கு உரியதாக கிடைத்த வட்டி ரூபா 116,863 தொகை ஆண்டின் வட்டி வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | ரூபா 145,920 கூட்டு பெறுமதியிடையே நுகர்வுப் பண்டங்களில் 56 உருப்படி கள் இயந்திர மற்றும் உபகரணங்கள் கணக்கின் கீழ் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | இருப்பு சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | நிரந்தர பதவியணிக்கு செலுத்தப்பட்ட சம்பளத்திற்கு குறைவாக மீளளிப்பு செய்யப்பட்ட ரூபா 81,370 பெற வேண்டிய மீதியாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதி இணங்காணப்பட்டு சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும |
| (ஐ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து வெகுமதியாக கிடைத்த ரூபா 85,218, பெறுமதியான 1000 லீற்றர் நீர்த்தாங்கிகள் 07 நுகர்வுப் பொருன் இருப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | வெகுமதிகள் சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 02 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் அதற்குரிய பயன்பாட்டு ஆவணங்கள்/பட்டோலைகளில் காணப்படும் மீதிகளுக்கிடையே ரூபா 1,211,153 ஆன வேறுபாடு நிலவியது. | வேறுபாட்டை இணங்காண நடவடிக்கை எடுக்கப்படும்.. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்கு திருத்தப்படும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு | 2002 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் மதிப்பீடுகளின் அடிப்படையில் மீளாய்வாண்டில் வீத வரி அறவிடப்பட்டமையால் மதிப்பீடு கால அடிப்படையில் செயற்படாத காலப்பகுதி முறையே 16 மற்றும் 04 வருடங்கள் ஆகும். | 2020 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்ற வீரகெட்டிய மதிப்பீட்டு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பு பரிசோதனை ஒன்று நடாத்துவதற்கு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு இடமளிக்கப்படவில்லை என்பதும், வலஸ்முல்ல வீத வரி அதிகார பிரதேசத்திற்கு உரிய புதிய மதிப்பீடு கிடைத்த பின்னர் நடைமுறைப்படுத்தப்படும் என்பது | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | உள்ளுராட்சி ஆணையாளரின் (தெற்கு) 2021 ஜனவரி 01 ஆந் திகதிய 4/04/01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (ஆ) 6 ஆம் பந்தி | ஆணைச்சீட்டு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவை வீத வரி பெறுமதியை கரித்தில் கொள்ளாது மீளாய்வாண்டில் வருமான பரிசோதகர் ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர் மற்றும் சபையின் செயலாளர் ஆகியோருக்கு 2023 ஆம் ஆண்டில் காலாண்டு ரீதியான நிலுவை பட்டியல் பதிவேட்டிற்கு உரியதாக சேகரிக்கப்பட்ட பணத்தில் 10 சதவீதம் மற்றும் 03 சதவீதம் தரகுப் பணமாக ரூபா 181,933 தொகை 2023 நவம்பர் மாதம் வரை செலுத்தப்பட்டிருந்தது. | தரகுப் பணம் செலுத்தும் போது உாயி நிலுவைப் பணம் அறவிடப்பட்ட திகதிகள், கடமைகளில் இருந்து வெளிச் சென்ற விடுமுறைத் தினங்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை. | தொடர்புடை சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,185,943 ஆக காணப்பட்டதுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,592,388 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் குத்தகை | 3,835,000 | 3,744,817 | 4,907,714 | 4,356,197 | 3,284,000 | 3,857,349 | 4,348,772 | 5,519,094 |
| வாடகை | 31,582,600 | 62,201,239 | 72,307,611 | 8,632,978 | 19,749,000 | 27,392,546 | 25,770,069 | 18,739,350 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,155,000 | 3,320,755 | 3,494,147 | 390,083 | 1,200,000 | 2,667,535 | 2,527,305 | 563,475 |
| ஏனைய வரு மானங்கள் | 14,523,000 | 15,985,664 | 15,971,775 | 13,889 | 4,965,500 | 10,308,815 | 10,308,815 | - |
| **மொத்தம்** | **52,095,600** | **85,252,475** | **96,681,247** | **13,393,147** | **36,009,350** | **44,226,245** | **42,954,961** | **24,821,919** |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2316 வீத வரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய குத்தகைப் பணம் ரூபா 4,095,480 தொகையை அறவிடுவதற்கு பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 368,627 தொகை அறவிடப்பட்டது என்பதும் எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 85 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 193,200 தொகையான வரி மற்றும் ரூபா 6,933,130 தொகையான சந்தை குத்தகை ஆகியவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார வரி நிலுவையில் ரூபா 21,600 தொகை அறவிடப்பட்டு ரூபா 6,000 தொகைக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் ரூபா 259,750 சந்தை குத்தகை அறவிடப்பட்டு ரூபா 4,812,239 தொகைக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளமை. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்கு சொந்தமான 19 கடைகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 130,319 தொகையான கடை வாடகையை அறவிடுவதற்கு பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 102,519 அறவிடப்பட்டமையும் ரூபா 23,800 தொகையை பதிவழிப்பதற்கு ஆளுனரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளமை. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | இயந்திர உபகரணங்கள் வாடகைக்கு வழங்கியமையால் பெற வேண்டிய ரூபா 1,569,529 தொகை மற்றும் 15 விளம்பர பலகை அலகுகளில் இருந்து பெற வேண்டிய கட்டணம் ரூபா 320,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,156,000 தொகையான இயந்திர வாடகை அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையை பதிவழிப்பதற்கு ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விளம்பரப் பலகை கட்டணம் ரூபா 210,000 அறவிடப்பட்டு எஞ்சிய நிலுவை நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 1,297,060 தொகையான நீதிமன்ற தண்டப் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் நிலுவை மீதியில் 03 வருடங்களை விஞ்சிய ரூபா 296,069 மீதியொன்று காணப்பட்டது. | ரூபா 1,000,991 அறவிடப்பட்டுள்ளமை மற்றும் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட 05 கட்டிடத்திட்டங்களுக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட அளவினை விஞ்சிய நிர்மாணங்களுக்காக தேசிய அரச சபையின் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கு 2021 யூலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | அதிகாரச் சட்டத்தின் மற்றும் திருத்தப்பட்ட வர்த்தமானியின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய ரூபா 756,618 தொகையான மேவுகை அங்கீகாரத்தினை வழங்கியமைக்கான கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ரூபா 42,506 தொகையான கட்டணம் செலுத்தி அனுகூல சான்றிதழ் பெற்றுக் கொள்ளாது வியாபார நிறுவனம் ஒன்று கட்டிடம் நிர்மாணித்து வியாபார பணிகளை முன்னெடுக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | திருத்தப்பட்ட திருத்தத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் அனுகூல சான்றிதழ் வழங்கி கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | அனுகூல சான்றிதழ் வழங்குவதற்கு மற்றும் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வீரகெட்டிய பொதுச் சந்தையை குத்தகைக்கு எடுத்த குத்தகையாளரால் 2007 ஆம் ஆண்டுக்கு உரியதாக செலுத்த வேண்டிய ரூபா 820,558 தொகை செலுத்தப்படாமையின் அடிப்படையில் குத்தகையாளர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கிற்குரிய 2019 நவம்பர் 28 ஆந் திகதிய வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் நிலுவை குத்தகை தொகை மற்றும் வழக்கறிஞர் கட்டணம் உள்ளடங்கலாக குத்தகையாளரிடம் அறவிடப்பட வேண்டிய போதிலும், தீர்ப்பு கிடைக்கப் பெற்று 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைச் சந்தை குத்தகை தொகைக்குரிய பட்டியல்கள் சரியாக தயாரிக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து நிலுவை குத்தகை மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ஆகியவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையால் வர்த்தக அனுமதிப் பத்திரங்களை வழங்கியிருந்த 16 கைத்தொழில்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாமையால் சபைக்கு பெற வேண்டிய ரூபா 79,200 தொகையான சுற்றாடல் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 06 கைத்தொழில்களுக்கு சுற்றாடல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ள தொழில் நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிகளை பெற்றுக் கொள்ளுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | தொழில் நிறுவனங்கள் சுற்றுச்சூழல் அனுமதி பெற ஊக்குவிக்க வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் 03 இயந்திர உபகரணங்கள், 17 காணி மற்றும் கட்டிடங்களினதும் 12 | கணக்கெடுப்பு பணி முடிந்தவுடன் வாகனங்கள், காணிகள், கட்டடங்கள் மற்றும் | சொத்துக்களை சட்டப்பூர்வமாக உரிமையாக்குவதற்கு |

| | | |
|---|---|---|
| மயானங்களினதும் உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மயானங்கள் கையகப்படுத்தப்படும். | அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.4 செயற்திட்டங்கள், பணிப்பொறுப்புக்கள் அல்லது மூலதன பணிகளிலான தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவதற்கு வருடாந்த பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7,018,718 கூட்டுப்பெறுமதியான 82 அபிவிருத்தி முன்மொழிவுகள் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அந்த 04 கைத்தொழில்கள் முன்னுரிமையின் படி நடைமுறைப்படுத்தப்பட்டன. | வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4 பிரிவின் பிரகாரம் பெறுகையின் போது ஆகக் குறைந்தது மூன்று அங்கத்தவர்களை கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் வீரகெட்டிய ஹெலபோஜுன் நிலையத்திற்கு ரூபா 457,065 தொகையான பாதுகாப்பு கமரா கட்டமைப்பொன்று பொருத்தியமைக்கு குறித்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.6.1 (அ) பிரிவின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு உரிய பொருள் அல்லது பணிக்கு உரிய அமைப்பு குறிப்பீடு உரிய பெறுகை நோக்கங்களை அடைந்துகொள்ள தேவையான அளவினை விட குறுகியதாக விவரிக்கப்படக்கூடாத போதிலும், ரூபா 495,730 தொகையான கொள்வனவுகள் தொடர்பில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.11 பிரிவின் மற்றும் காலி மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தின் மின்சார அத்தியட்சகரினால் வழங்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் வீதி விளக்குகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான வழிகாட்டியின் பந்தி எண் 09 இன் படி, கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைப் பெற வேண்டும் எனினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்காது ரூபா 780,000 மதிப்புள்ள 30 தெருவிளக்கு தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தரை கொண்டமைந்த விலைக்கேள்வி குழுவின் பரிந்துரையின்படி தெருவிளக்கு பெட்டிகள் வாங்கப்பட்டன. | தெரு விளக்குகள் நிறுவுதல் மற்றும் பராமரிப்பு தொடர்பான பெறுகைகள் வழிகாட்டி மற்றும் வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகளின் பிரகாரம் நிர்மாணப் பணிகளுக்காக இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு கூறுவிலை கூறாமல் ரூபா 4,907,530 சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன், கிராமப்புற வீதிகள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் என்ன அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அடையாளம் காண தொழில்நுட்ப அதிகாரி முடிக்கப்பட்ட பணி அறிக்கைகளைத் தயாரிக்கவில்லை. | சபையின் தீர்மானத்தின் படி, உழவு இயந்திரங்களுக்கு மாவட்ட விலைக் குழு விலையின்படி கட்டணம் செலுத்தப்பட்டது மற்றும் முடிக்கப்பட்ட பணி அறிக்கைகளின் மதிப்புகளின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் பிரதேச சபை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், பூர்த்தி வேலை அறிக்கைகளை தயாரிக்காது கொடுப்பனவு மேற்கொள்ளப்படக்கூடாது. |
| (ஆ) | 2023 செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட சாலை கூறுவிலை ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விலைகளின்படி, பெறப்பட்ட மோட்டார் கிரேடர் மற்றும் பேக்ஹோ லோடர் இயந்திரம் ஆகியவற்றை செலுத்தாமல் சபையின் முடிவின் அடிப்படையில் ரூபா 412,836 தொகை சபையின் நிதியத்திலிருந்து கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் சபைத் தீர்மான இலக்கம் 7.18 இன் கீழ், ஜே.சி.பி. மற்றும் மோட்டார் கிரேடர்களுக்கு பணம் செலுத்தப்பட்டது. | மிகைக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கொன்கிறீட் கற்கள் பதிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட 07 வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில், கொங்கிரீட் கட்டைகள் ஒரு தொகுதிக்கு ரூபா 35 மற்றும் ரூபா 37 என்ற விலையில் ஒப்பந்தகாரர்களால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றின் அடிப்படையில் விலை நிர்ணயிக்காது முறையே ரூபா 43.13 மற்றும் ரூபா 47.40 படி செலுத்தப்பட்டமையால் ரூபா 460,396 அதிகமாக செலுத்தப்பட்டது. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளின் பிரகாரம் பணம் செலுத்தப்பட்டது. | கூடுதலாக செலுத்தப்பட்ட கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 02 வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில், வீதி நிர்மாணத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கொங்கிரீட் அச்சுக்கற்களுக்கு குறித்த தொகையை விஞ்சி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 62,896 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | அச்சுக்கற்கள் பதிக்கப்பட்ட சதுர மீட்டர்களின் பிரகாரம் கணிப்பிடப்பட்டு பணம் செலுத்தப்பட்டுள்ளமை. | கூடுதலாக செலுத்தப்பட்ட கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பதவியணி முறையே 83 மற்றும் 91 ஆக இருந்ததால், 08 பதவிகள் தொடர்பான 21 மிகைகளை பூர்த்தி செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகைப் பதவியணியை அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்குவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் முகவரிக்கமைய தகவல் கோரப்பட்டமை. | பணியாளர்களின் மிகைகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆண்டுக்குரிய விடுமுறைத் தினங்கள் 45 இனை விஞ்சி சபையின் இரு ஊழியர்கள் 2022 ஆம் ஆண்டின் போது மற்றும் பத்து ஊழியர்கள் 2023 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்டிருந்த விடுமுறைகளுக்கு சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 6,612 மற்றும் ரூபா 75,977 அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்குரிய நிலுவைப் பணத்தை அறவிட்டுள்ளமையும், 2023 ஆம் ஆண்டுக்குரிய நிலுவையில் ரூபா 42,109 அறவிடப்பட்டுள்ளமையும், எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சம்பளமாக கூடுதலாக செலுத்தப்பட்டவை துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திறைசேரி பிரதிச் செயலாளரின் 2019 யூன் 27 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2019 இன் பந்தி 3 இன் படி, சபையில் பணியாற்றி இடைநிறுத்தப்பட்ட ஆறு ஊழியர்களிடமிருந்து செலுத்த வேண்டிய கடன் நிலுவை ரூபா 95,402 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் ரூபா 5,000 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய ஊழியர் கடன்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஊழியர் கடனை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |